உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 17 | பராபவஞு மார்கழித் திங்கள் 1ம்வ [16–12–66] | இதழ் 12

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 6)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்
சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,
காஞ்சிபுரம்.

[மலர் 17, இதழ் 10-ன் தொடர்ச்சி]

"அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும் — நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று."

இவ்வெண்பாவின் பொருளை சுன்னாகம் மகாவித்துவ சிரோமணி அ. குமாரசுவாமிப் பிள்ளை யுரையிற் காட்டியவாறு இது:-

"சவையிலே எடுத்துச் சொல்லுதலை அஞ்சி உடம்பு நடுங்குவோருடைய படிப்பும்; மூடர் சவையை அஞ்சாது பேசும் ஆரவாரச் சொற்களும்; பழிபாவங்களாகிய குற்றங்கள் சாராது தேடி நல்வழியிற் கொடுத்துத் தாமும் அநுபவியாதவருடைய செல்வமும், வறியவருடைய இல்லாளின் நன்மையும் உண்டாதலினும் உண்டாகாதிருத்தல் உத்தமம் ஆகும்."

வேறு புலவர் எழுதிய உரை இது:—

"சபையில் உள்ளவர்க்குப் பயந்து உடம்பு நடுங்குபவரது படிப்பும், படியாதவர்கள் சபைக்கு அஞ்சாமற் பேசுகின்ற தடுமாற்றமான பேச்சும், லோபம் ஆகிய குற்றத்திற்குப் பயந்து, பிறர்க்குக் கொடுத்துத்தாமும் அநுபவியாத லோபிகளுடைய செல்வமும், தரித்திரர்களுடைய இனிமையான அழகும் உண்டாதலினும் உண்டாகாமலிருப்பதே நல்லது."

மற்றுஞ் சில உரைகளிற் பெரிதும் வேறு பாடில்லாமல் இவ்விரண்டனையும் ஒத்துள்ளன அவரவர் கொண்டபொருள்கள்.

"சவையஞ்சுவார் கல்வியினுற் சிறிதும் பயனில்லை" என்பது கருத்து.

சொல்லக் கருதிய சவையஞ்சுவார் கல்வியொடு பெரிதும் அதன் குணத்தையுடைய ஆகுலச் சொல் முதலியவைகளும் உடன் வைத்துக் கூறப்பட்டமையால் இது பழிப்பொப்புக் கூட்டம் என்னும் அணி. தம்மைப் பிறரறிதல் வேண்டிச் சொல்லப் படுதலின் ஆகுலச் சொல் என்றார்."பாவத்தால் வந்த பொருளைக் கொடுத்தலும், அறஞ் செய்தற்குக் காரணமான தன்னுடம்பை, உண்ணாது வாட்டுதலும் தருமமாகா." (சு. அ. கு. உரை). "வெகுகாலம் சிரமப்பட்டுக் கல்வி கற்றவர் தாம் அறிந்த விஷயங்களைப் பல புலவர் சபையில் அஞ்சா தெடுத்துரைத்தால் மாத்திரமே அவர்க்குப் பெருமையும் புகழும் உண்டாம்: அங்ஙனம் இல்லாதபடி சபைக்கு அஞ்சுவராயின், அவர்க்குக் கல்வி கற்ற சிரமம் மாத்திரமே உண்டாய்ப் பயன் உண்டாகாமையால், அதனினும் கல்லாமையே நன்று; சிரமம் இல்லாமையால்" என்றபடி.

"கல்லாதவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்."

படிப்பில்லாதவர் அறிவின்மையால் சபைக்கு அஞ்சாமல் தாறு (தவறு) மாறு ஆகப்பேசுதல் அவர்க்கு அவமானத்தை விளைத்தலால், அதனினும் பேசாமை மிக நல்லது.

இதன் இழிவை மேல் இந்நூலில்,

"கற்பன ஊழ் அற்றுர் கல்விக் கழகத்தாங்கு + ஒற்கம் இன்று + ஊத்தைவாய் அங்காத்தல் — மற்றுத்தம் வல்லுருவு + அஞ்சன்மின் என்பவே மாபறவை புல்லுருவு + அஞ்சுமா போல்." எனக் காண்க.

.செல்வம் படைத்ததற்குப் பயன் பிறர்க்குத் தானம் செய்து தாமும் அனுபவித்தலேயாதலால், அவற்றைச் செய்யாதார்க்குச் செல்வம் சம்பாதித்துக் காத்து வைக்கும் கடுந்துன்பங்கள் மாத்திரமே நிற்கின்றன; புண்ணியமும் புகழும் உண்டாகா; ஆதலால், அவர் செல்வத்தினும் செல்வம் இல்லாமையே மேல்.

"வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன் நல்குரவே போலும் நனிநல்ல கொன்னே அருளிலன், அன்பிலன், கண்ணறையன் என்று பலரால் இகழப் படான்" என மேல் இவர் தாமே இதனை விவரிப்பர்.

வறியவரிடத்து உள்ள அழகு சுகாநுபவத்துக்கு உதவாமல் காட்டிலே காய்ந்த நிலாப் போல வீண்படுதலாலும்

((அ) நாணணிகளையும் மாணெழில் சிதைக்கும்
.... பசிப்பிணி யென்னும் பாவி."

(ஆ) "தரித்திரம் மிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை யுலர்தர வாட்டும்." என்றபடி).

இயற்கையில் அமைந்த அவ்வழகை வறுமை பின்பு கெடுத்தலாலும், அது உண்டாதலினும் உண்டாகாமையே நன்று; அன்றியும் பொலிவில்லாதாரைக் காண்கையில் உண்டாவது போல இன்னலமுடையாரைக் காண்கையில் இரக்கம் உண்டாகாமையாகிய உலகவியல்பையும் கருதுக.

* இங்ஙனம் ஒப்புமைக் கூட்டவணிபடக் கூறினாராயினும், கல்வி அதிகாரப்பட்டு நிற்றலால், முதல் இரண்டு பொருள்கள் உபமேயமும், மற்றை யிரண்டுபொருள்கள் உபமானமும் எனக் கொள்ளுதல் தகுதி. ஆகவே இதனைத் தீபகாலங்காரம் எனவேண்டும். வர்ணியங்களை யேனும் அவாணியங்களையேனும் தனியே ஒரு தன்மையில் முடித்தல் ஒப்புமைக் கூட்டமும், உபமான உபமேயங்களை ஒரு தன்மையில் முடித்தல் தீபகமும் ஆம்.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்விக்கு நவையஞ்சியீத் துண்ணார் செல்வமும், கல்லார் அவையஞ்சா வாகுலச் சொல் லுக்கு நல்கூர்ந்தா ரின்னலமும் முறையே உவமையாய் நிரனி றைப் பொருள்படும்.

"அவை—ஸபா என்ற வடசொல்லின் சிதைவு. சபா—சபை. சவை—அவை எனத் திரிந்த சொல்லும் உண்டு. அவை என்னுஞ் சொல் பன்மைப் பெயராதலின் பலர் கூடிய கூட்டத்தை யுணர்த்திய தொகுதிப் பெயருமாம்" என்றுருமுளர்.

'ஆகுல நீர பிற' என்புழித்தந்த பொருளே இதிலும் 'ஆகுலச் சொல்' என்புழிக் கொள்க.

நவையஞ்சி - (1) இம்மையிற்பழியும் மறுமையிற் பாவமும் உண்டாதலை அஞ்சி (2) 'செய்யத்தக்கவற்றைச் செய்யாமை யாகிய குற்றம் நேர்தலை அஞ்சி', (ஐயர் குறிப்புரை) நவை — குற்றம் நேர்தலை எனக் கொண்டுரைத்தது இது. (3) ஈயாம லிருத்தலால் வருங் குற்றம் (சிதம்பர ராமலிங்கம் பிள்ளை குறிப் புரை) பொருள் தேடுங் காலத் துளவாம் பழி பாவங்களாகிய குற்றங்களுமாம்(ஷெ).

ஈத்து - (1) 'ஈந்து என்பதன் முதற் சொருபம்'. இதுவே ஈந்து என மெலிவது. ஈத்து என்பதும் ஈந்து என்பது போலவே இலக்கியங்களிற் பயின்று வரும். திருக்குறளில் 'ஈத்துவக்கு மின்பம்' என்றதுங் காண்க. 'ஈத்தலும் ஈதலும்போலப் பாத்தலும் பாதலும் ஒன்று' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்தது கொண்டு, ஈத்து என்பதை ஈந்து என்பதன் வலித்தல் என்பது

---

* 'குமரகுருபரன்' வாசிப்பவர்கள் இதனை உளங்கொள்க.

பழைய இலக்கணநூற் கொள்கைக்குச் சிறவாது என அறிக. அன்றியும் "வலித்தல் மெலித்தல்" என்னுஞ் சூத்திரத்து 'வேண்டுழி' என்றதால் எதுகை தளை முதலிய யாப்பிலக்கணத் திற்கு இன்றியமையாதவிடத்து மாத்திரமே செய்யுள் விகாரம் வருதற்குரிய தென்பதும் அப்படிப்பட்ட அவசியமில்லாதவிடத் திலும் 'ஈத்து' எனச் சான்றோர் செய்யுளில் வந்திருத்தலும் உணர்க. (இது குறிப்பேட்டிற்கண்டது).

நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகாரத்துப் புறத்திணையியற் சூத்திரத்தின் (3) உரையிலே "தந்து நிறை பாதீடு" என்புழிவரும் 'பாதீடு' என்றதன் விளக்கமாக எழுதிய வற்றுள் முதற்கண் உள்ளது அது. பாத்தல் ஈத்தல் போல்வது. பாதல் ஈதல் போல்வது என்றலும் ஈத்தலும் ஈதலும் ஒன்று. அவ்வாறே பாத்தலும் பாதலும் ஒன்று என்றலும் அவர் உட் கோள். அது பொருந்தாது.

தள் – தரு, கொள் – கொடு, பள் – படு, நள் – நடு, விள் – விடு முதலியவற்றால் தன்வினைக்கும் பிறவினைக்கும் உள்ள வேறுபாடும் அதற்குத் தக்கவாறு சொல்லின் நிலை மாற்றமும் விளங்கும். அவ்வாறே ஈதற்கும் ஈத்தற்கும் வேறு பாடும் நிலைமாற்றமும் உண்டு. பாத்தீடும் பாதீடும் வெவ்வேறே.

ஈதல் – பாதல் என்பன ஒன்றே. எப்பொழுது? மருவிய பின்னர். மருவாதமுன் இருதல், பகுதல் என்றிருந்தன. அப் பொழுதுள்ள ஒருமை வேறு. இகுத்தல், பகுத்தல் இரண்டும் முறையே 'ஈத்தல்' 'பாத்தல்' என்று மருவின. இகு – ஈஎன மருவிற்று. இகுதல் – ஈதல், இருத்தல் – ஈத்தல், பகுதல் – பாதல், பகுத்தல் – பாத்தல், பகுந்தீடு – பாதீடு, (பருவாய் பகல்) பகுத்தீடு– பாத்தீடு, (பாத்தூண் பகை) பகுக்கப் படுதலின் பகல் (சிலப். 4:–81 உரை). இடுதல் – ஈதல் என்றுதலும் இடுத் தல் – ஈத்தல், என்றுதலும் கூடும். 'இடுத்தல்' என்றல் இரு வழக்கிலும் இல்லை, இகுக – ஈக, இகுக்க – ஈக்க, இகுத்து – ஈத்து, என்று மருவிய துணர்க. 'ஈ' என்ற திரிசொற்பகுதி ஈய்ந்து, ஈந்து (என்று தன் வினையிலும்) ஈய்த்து ஈத்து எனப் பிறவினையிலும் வருதல் காண்க.

"ஈய்ந்தேன் ஈய்ந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள" என்று கம்பரும், "ஈய்ந்தவன் காண் எழிலாரும் யெழிலாக் கச்சியே கம்பன் காண் அவன் என் எண்ணத்தானே" என்று அப்பரும் இச் சொல்லை இவ்வுருவில் ஆண்டிருத்தல் அறிக. ஈயும் என்று தன்வினையில் வருதல் போன்று பிறவினையில் ஈக்கும் என்று பெரிதும் வாராமைக்குக் காரணம் உண்டு.

'செந்நீர்ப் பசும் பொன் வயிரியர்க் கீத்த முந்நீர் விழவின் நெடியோன்' என்றதிற் பிறவினையில் வந்ததறிக. நெடியோன் தானேயீயாது, தன் ஆட்களைக் கொண்டு ஏவியீந்தான் ஆதலின் ஈத்தநெடியோன் என்றார் அப்பாட்டாசிரியர்.

"மண்ணுடை முடங்கல் மாதவியீத்ததும்
ஈத்தவோலை கொண்டு இடை நெறித் திரிந்து
தீத்திறம் புரிந்தோன்"

என்புழி (சிலம்பு, 2–13–76–7)எதுகை பற்றியதன்று, பிறவினை பற்றியதே. பிறவினையிற் பலவகை உண்டு. அவற்றைத் தனிக் கட்டுரையில் விளக்கல் வேண்டும்.

'ஈத்துவக்கும் இன்பம்' — ஈத்து — ஈந்ததைப் பெறச் செய்து என்று பொருள், பிற பின். (தொடரும்)

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 3 – 00 * வெளிநாடு ரூ. 4 – 00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்,
தருமபுரம். மாயூரம் P. O.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
உரை நடை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 17. இதழ் 11-ன் தொடர்ச்சி)

அம்புலிப் பருவம்

மண்டலம் போற்றுருவ மமுதமய மாய்முழு
மதிக்கடவு ளெனவருதலால்
வாருறு தலைமடுக் கப்பொங்கு மானந்த
மாக்கட லிடைத்தோன்றலால்
தண்டலில் கொடிச்சிவாய்க் குமுதம்விள் ளக்கரத்
தாமரை முகிழ்த்திடுதலாற்
சகலபுவ னத்திலு முயிர்ப்பயிர் தழைப்பநற்
றண்ணளி சுரந்திடுதலால்
துண்டமதி நதியொடு பொதிந்தவே ணிப்பரஞ்
சோதிகட் பொறியாதலால்
தோன்றலிவ னின்னையொத் துளனு னினக்குமொரு
துணையிவன் போலில்லைகாண்
அண்டரண் டத்தொடகி லாண்டம் படைத்தவனெ
டம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே. 62

எல்லா மண்டலங்களும் ஏத்தி வழிபடுகின்ற திருவுருவம் என்று மழியாத அமுத வடிவமாய்ப் பூரண ஞானமுடைய கடவுளென இவன் வர நிலவுலகம் போற்றுகின்ற உருவம் அமுதமயமாய் நிறைந்த சந்திரனாகிய கடவுளென நீ வருதலாலும் கங்கையாறு தலையிலே சேரப் பொங்கிய ஆனந்தப் பெருங் கடலாகிய சிவபெருமானிடத்திலிருந்து இவன் தோன்றப் பெரிய ஆறுகள் சேர்தலால் பொங்குகின்ற ஒலியையும் சங்குகளையு

முடைய பெரிய கடலினிடத்தே இவன் தோன்றுதலாலும் குறை தலில்லாத கொடி போன்ற வள்ளியம்மையாரது திருவாயாகிய குமுதம் மலரும்படி இவனது கைத்தாமரைகள் கூட நீரளவிற் குறையாத கொடியிலே உள்ள குமுத மலர் மலர ஒளியை யுடைய தாமரையை நீ குவிய வைப்பதாலும் எல்லாப் புவனங் களிலும் உள்ள உயிர்ப் பயிர்கள் தழைக்கும்படி நல்ல குளிர்ந்த கருணையை இவன் சுரக்க நிலவுலகத்திலுள்ள எல்லா உயிரை யுடைய பயிர்களும் தழைக்கும்படி நல்ல தண்ணளியை நீ சுரத்தலாலும் பிறைத்திங்களைக் கங்கையாற்றுடன் சேர்த்து வைத்த சடைமுடியையுடைய பரஞ்சோதியாகிய சிவபெருமா னது நெற்றிகட் பொறியிலிருந்து இவன் தோன்றியவனாக அப் பெருமானது இடக் கண்ணாகிய பொறியாக நீ இருத்தலாலும் புகழாளனாகிய இவன் உன்னை யொத்துள்ளான். உனக்கும் இவனைப்போல மற்றொரு துணை இல்லை என்பதை அறிவாயாக. வானுலகத்தோடு மற்ற எல்லா அண்டங்களையும் படைத்தவ னாகிய இவனோடு சந்திரனே! விளையாட வருவாயாக அழகு பொலிகின்ற கந்தபுரிப்பதி தழையும்படி வந்துள்ள கந்தப் பெருமானுடன் சந்திரனே! விளையாட வருவாயாக.

சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந்
தோகைமேல் கொண்டருளினாய்
தோற்றிமுன் பொங்கிமலை போலவலை மோதுமச்
சோதிவே லையுமுகந்தாய்
குற்றமில் குணத்தைக் குறித்தவிர வலர்முகம்
கோடா தளித்தல்செய்தாய்
கோகனக நாயகன் வரக்கூ விடுங்குக்
குடங் கொடிய தாகவைத்தாய்
உற்றிடு மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனொழுக
ஒளிநிலா நகைமுகிழ்த்தாய்
உன்செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமால்
உனையுமிவ னெவ்வாதிரான்
அற்பொதி களத்தவ னளித்தகும ரேசனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே. 63

இவன் சொல்லைத் தருகின்ற பெரிய புலவர்கள் கலையமுதத்தைக் கொள்ளும்படி பெரிய மயிலின் மேல் வீற்றிருந்தருளினான். நீ, புகழையுடைய பெரிய தேவர்கள் கிரணமாகிய அமுதத்தை விருந்தாகக் கொள்ள மகிழ்ச்சியை அடைந்தாய். இவன் மலையையும் அதனைப் போலத் தோன்றி முன்னிருந்து கடலை ஊடுருவிய ஒளியையுடைய வேற்படையை விரும்பினான். நீ காணப் பெற்றுக் கரையின் மருங்கில் பொங்கி மலையைப் போல அலை மோதுகின்ற அந்த ஒளியையுடைய கடலை விரும்பினாய். இவன் குற்றமில்லாத குணத்தையுடைய இரவலரது முகம் கோணாமல் கொடுத்தலைச் செய்தான். நீ குற்றமற்ற குணங்கொண்ட இரவில் மலரும் மலர்கள் வாடாமல் அருள் செய்தாய். இவன் தாமரை நாயகனாகிய சூரியன் வருவதற்குக் கூவுகின்ற கோழியைக் கொடியிலே யிருக்கும்படி வைத்தான். நீ அக்கோழியைக் கொடுமையையுடைய பகைப் பொருளாக வைத்தாய். இவன் பொருந்திய வாயிதழ்க் குமுதம் விரிந்து குளிர்ந்த தேன்போன்ற வாய்நீர்சிந்த நகை முகிழ்த்தான். நீ நீரிலே பொருந்திய இதழ் களையுடைய குமுதமலர் விரிந்து தண்ணிய தேன் ஒழுகும்படி ஒளியையுடைய நிலவுக் கதிரை விரித்தாய். உனது செய்கையும் எமது தலைவனாகிய இவனது செய்கையை ஒத்ததே. ஆதலால் உன்னையும் இவன் ஒவ்வாமலிருக்க மாட்டான். கருமை நிறைந்த கழுத்தை உடையவனாகிய சிவபெருமான் தந்த குமரேசனுடன் சந்திரனே! விளையாட வருவாயாக. அழகு பொலிகின்ற கந்தபுரிப்பதி தழையும்படி வந்துள்ள கந்தப் பெருமானுடன் சந்திரனே! விளையாட வருவாயாக.

கங்கைமுடி யடிகட்கொர் கண்ணு யிருத்தியக்
கண்ணினுண் மணியிவன்காண்
கலைகள்சில நிறைதிபின் குறைதியிவ னென்றுமொண்
கலைமுழுது நிறையநின்றான்

எங்குமிர வோனெனத் திரிதியிவ னடியவர்
எவர்க்குமிர வினையொழித்தான்
இருநிலத் தங்குரிக் கும்பயிர் வளர்த்தியிவன்
எவ்வுயிரும் வாழச்செய்தான்

பொங்கமுத மமுதா சனர்க்குதவி ஞயிவன்
புத்திமுத் தியுமளித்தான்
புவனம் படைத்தவிவ னின்னின்மிக் கானெனப்
புகல்வதோர் பொருளன்றுகாண்
அங்கண்மறை யோலிட் டரற்றநின் றவனுடன்
அம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே. 64

கங்கையைச் சடையிலே வைத்த சிவபெருமானுக்கு ஒரு கண்ணாக நீ இருக்கின்றாய். அக் கண்ணின் மணியாக விளங்குபவன் இவன். நீ சில கலைகள் நிறைந்தவனாக ஆகின்றாய். பின்பு அக் கலைகளெல்லாம் குறைந்த வனாகவும் ஆகிவிடுகின்றாய். இவன் எப்பொழுதும் மிகவுயர்ந்த கலைகள் முழுவதும் நிறைய விளங்கிக் கொண்டிருக்கின்றான். எல்லா இடங்களிலும் "இரவோன்" (இராப்பொழுதினன்) என்று அனைவரும் சொல்லும்படி அலைகின்றாய். இவன் அடியவர் அனைவருக்கும் இரத்தல் வாராதபடி ஒழித்து விட்டான். பெரிய நிலத்திலே முளைத்து வரும் பயிர்களை மட்டும் நீ வளர்க்கின்றாய். இவன் இங்குள்ள எல்லா உயிர்களையும் வாழ வைத்துள்ளான். திருப்பாற் கடலிலே பொங்கி வந்த அமுதத்தை, அமுதுண்ணும் தேவர்களுக்கு நீ உதவினாய். இவன் எல்லோருக்கும் போகத்தையும் மோட்சத்தையும் கொடுத்தான். எல்லா புவனங்களையும் படைத்த இவன் உன்னை விட உயர்ந்தவனென்று சொல்வது ஒரு பொருளாக மாட்டாது. வேதங்கள் அங்கங்கே ஓலமிட்டு அரற்றும்படி நின்றவனுடன் சந்திரனே! விளையாட வருவாயாக. அழகு பொலிகின்ற கந்தபுரிப்பதி தழையும்படி வந்துள்ள கந்தப் பெருமானுடன் சந்திரனே! விளையாட வருவாயாக.

பாயிருட் போதத் திருட்டன்றி யகவிருட்
படலங் கிழிப்பதுணராய்
பனிவிசும் பிற்பொலிவ தொன்றலாற் புவனப்
பரப்பெலாம் பொலிவதோராய்

சேயிதழ்க் குமுதந் திறப்பதல் லாதுளத்
திருமலர் திறக்கவறியாய்
சிறைவிரி சகோரப்பு ளன்றியெவ் வுயிரும்
திளைத்தின்ப மாரச்செயாய்

நீயிவற் கொப்பன்மை செப்புவதெ னிப்பரிசில்
நின்பெருந் தவமென்சொல்கேன்
நெடியவன் முதற்றேவர் குறுகிநிற் பவுமுனை
நினைத்தழைத் தருளினன்காண்

ஆயிர மறைக்குமொரு பொருளா யிருப்பவனொ
டம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே. 65

இரவுப் பொழுதில் பரவுகின்ற புறவிருளை யல்லாமல் அக விருளாகிய அஞ்ஞானப் படலத்தை அகற்றுவதற்கு நீ உணர மாட்டாய். குளிர்ந்த வானத்தில் விளங்கித் தோன்றுவ தொன்றை யல்லாமல் அகில உலகப் பரப்புக்களிலும் விளங்கித் தோன்றுவதற்கு எண்ணமாட்டாய். சிவந்த இதழ்களையுடைய குவளைப் பூக்களைத் திறப்பதல்லாமல் மேலாகிய மனத்தாமரை யைத் திறப்பதற்கு நீ அறியமாட்டாய். இறகுகள் விரியும் சகோரப் பறவையை யல்லாமல் எல்லா உயிர்களும் இன்பத்தில் திளைத்து மகிழும்படி செய்யமாட்டாய். நீ இவனுக்கு இணை யின்மையைச் சொல்லுவதெற்றுக்கு? இந்தப் பெருமையைப் பெறுவதில் நினது பெரிய தவத்தை என்னவென்று சொல்லு வேன்! திருமால் முதலிய தேவர்கள் இவனது நல்லருளைப் பெறு வதற்கு வந்து தாழ்ந்து நிற்கவும், உன்னை நினைந்து அழைத் தருளினான். எண்ணில்லாத வேதங்களாலும் குறிக்கப் பெறு கின்ற ஒப்பற்ற பெரும் பொருளாயிருப்பவனுடன் சந்திரனே! விளையாட வருவாயாக. அழகு பொலிகின்ற கந்தபுரிப்பதி தழையும்படி வந்துள்ள கந்தப் பெருமானுடன் சந்திரனே! விளை யாட வருவாயாக.

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. மா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 17, இதழ் 11-ன் தொடர்ச்சி

The True Path leads straight to the Lord's Presence

மெய்ந்நெறி நேரே இறைவன் திருமுன்பில் உய்க்கின்றது

131. வழி சென்ற மாதவம் வைகின்ற போது
பழி செல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
வழி செல்லும்; வல் வினையார் திறம் விட்டிட்டு
உழி செல்லில், உம்பர் தலைவன்முன் னாமே.

Walking in the True Path
Thine holiness consummateth;
Thine host of Karmaic deeds scattereth
And they flee away
Leaving thus the tortuous path of the Karmaic ridden men of the World
Onward thou journey, straight inside;
Thou salt, for certain, stand in the Presence of the Lord of the Heavenly Beings.

ஞான நெறியிலே நின்று நீ செய்யும் தவம் முற்றுகின்ற போது, கொடிய வினைகளெல்லாம் கட்டறுத்துக்கொண்டு, விடைபெற்றுச்செல்லும். வினையிலே தோய்ந்து கிடக்கும் உலகோர் நெறியை விடுத்து, நேராக உள்ளே பயணம் செய்வாயானால், தேவர்கள் தலைவனும் சிவப்பெரும் பொருளின் சந்நிதியைச்சார்வாய்.

The Lord is within those that attained Divine Tranquility

அமைதிபெற்றவர் உள்ளத்தில் இறைவன் நிற்கின்றான்

132. இமையங்களாய் நின்ற தேவர்கள், ஆறு
சமையங்கள் பெற்றனர்; சாத்திரம் ஓதி
அமையறிந்தோம் என்பர்; ஆதிப் பிரானும்
கமையறிந்தார் உட்கலந்து நின்றானே

The Heavenly Beings,immortals as the mountain [Himalayas
Received the Darsans that are Six;
"We learnt them all and attained the Other [World"
-Thus quoth they;
But, in sooth,
The Primal Lord is intimacy within
Of those that have Divine Tranquility attained

இமயமலை போன்று அழிவறியாத தேவர்கள் ஆறு சமயங்களைப் பெற்றனர். "அவற்றின் சாத்திரங்களைக் கற்றறிந்து நாங்கள் மறு உலகத்தை அடைந்தோம்" என்பார்கள். ஆனால் அமைதி பெற்ற தவத்தினோர்க்கு, முதல்வனும் இறைவன் உள்ளத்திலேயே இரண்டறக் கலந்து நிற்கின்றான்.

குறிப்பு: வரி 3 அமை – அம்மை – மறுஉலகு
கமை – பொறுமை – அமைதி

Worship Siva; thyself Shall Siva Become

சிவனை வணங்கச் சிவனேயாகலாம்

133. பாங்கமர் கொன்றை ப்படர் சடை யானடி
தாங்கு மனிதர் தரணியில் நேரொப்பர்;
நீங்கிய வண்ணம் நினைவு செய் யாதவர்
ஏங்கி உலகில் இருந்தழுவாரே.

They who bow their head at the Feet of the Lord
Of spreading matted locks and Konrai bloom [bedecked,
-They Shall, like unto Him, become;
But they that yearn not for Him in Constant [eagerness
Shall be immersed in sorrow,
Sighing eternal here below.

வரிசியலமைத்த கொன்றை மலரைச் சூடிய விரிசடைப் பெம்மான் திருவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்கும் மனிதர்கள், இவ்வுலகிலேயே அவனை ஒத்தவராகின்றனர்; விடாது அவனை சிந்தனை செய்யாதோர், உலகிலே பிறந்திறந்து மீளாத் துன்பத்தில் ஆழ்வார்கள்.

Worship bringeth immortal life
தொழுதால் பிறப்பினை அறுக்கலாம்

134. இருந்தழு வாரும், இயல்பு கெட்டாரும்
அருந்தவம் மேற்கொண்டு அங்கு அண்ணலை எண்ணில்,
வருந்தாவகை செய்து, வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும்; பிறப்பில்லைதானே.

Despair not!
Ye that thus sit and bewaileth
And ye that have lost thy better nature!
Thou do seek the Lord in penance true,
The Heavens' Lord shall wipe thine tear away,
And grant thee Greatness;
And then shall thou Know births no more.

இருந்த இடத்திலேயே இருந்து, என்ன செய்வதென்று அறியாது ஏங்கி வருந்துவோரும், செயலாற்றல் அழிந்தவரும் தவத்தை மேற்கொண்டு இறைவனைச் சிந்தை செய்வார்களானால், அவர்கள் துன்பத்தை அவன் துடைப்பான்; வானவர் தலைவனான அவன் பேரின்பத்தை நல்குவான்; மீண்டும் பிறப்பில்லா வகை செய்வான்.

குறிப்பு: வரி-1 *இயல்பு – இயலும் தன்மை – செயல்படும் ஆற்றல்*
4 பெருந்தன்மை – பேரின்பநிலை,

(தொடரும்)

ஐய விறு?

"சித்தாந்தவித்தகர்" கயப்பாக்கம்
திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள்,
சென்னை.

பல்லாண்டுகளாக, இனவெறி, மொழிவெறி நம்முள் புகுவதன்முன், ஒருவர் இறையடி யெய்திறுல் (சைவரை மட்டுமே இங்கு குறிப்பது) அன்னுருக்குரிய இறுதிக் கடன்களை (சடங்குகளை) யவரவர் வருண ஆச்ரமத்திற்குரிய முறையில், அந்தணர்களும், தமிழ்த்தேசிகர் முதலானேர்களும் செவ்வையாய் நடத்தி வந்தார்கள். இச்சடங்குகளால் உயிர் நீத்தவரும் இறையடியை உள்ளபடியே அடைந்திருப்பார்கள் என்பது உறுதி. சிலர் இந்நிகழ்ச்சியைப் பலருக்கும் அழைப்பிதழ் மூலம் அறிவிப்பதுமுண்டு. அந்த அழைப்பின் தலைப்பு: (1) "சுபஸ்ரீகரணம்" = இழந்த சுபத்தை மீண்டும் பெறுதல், என்று பொருள்படும். (2) "உத்தரகிரியை" இறுதிச்சடங்குகள் என்று பொருள்.

சென்ற சில ஆண்டுகளாக காரணமில்லாமல் வடமொழி வெறுப்பும், அந்தணரிடம் வெறுப்பும் ஏற்பட்ட காரணத்தால், முன்சொன்ன அழைப்பிதழ்களின் தலைப்பு "நீத்தார் கடன்" "நீத்தார் வழிபாடு" என மாறிவிடத் தொடங்கியது. இது அடுக்குமா? அத்தலைப்பின் பொருளை நன்குணர்ந்துதான் அவ்வாறு செய்கிறுர்களா, அல்லது வடமொழி வெறுப்பின் காரணமாக அவ்வாறு தலைப்பை மாற்றி விட்டார்களா? இவ்வாறு செய்தல் அது குறித்த செய்கையினை நல்ல முறையில் மற்றவர்களுக்கு விளக்குமா என்றுவது ஆராய்ந்து செய்கிறுர்களா என்பது விளங்கவில்லை.

"நீத்தார்" யார் என்று திருக்குறள் ஆசிரியர் அருளியுள்ள குறள்கட்குப் பரிமேலழகர் இயற்றியுள்ள அரிய உரையை

நன்று கற்று, சிந்தித்துத் தெளிந்து ஓர் முடிவிற்கு அன்பர்கள் வரவேண்டும். ஆதலால் ஆராய்ச்சியாளர்கள் காய்தல் உவத்த லின்றி யிதனை நன்கு ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வந்து அதனை யும் இப்பத்திரிகையின் மூலமாகவே பதில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருக்குறள் - பாயிரம் - 3. நீத்தார் பெருமை. பரிமேலழகர் உரை.

"அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல்: அவ்வறம் முதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்து வார் அவராகலின், இது "வான்சிறப்பின்" பின் வைக்கப்பட்டது.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு."

(இ-ள்) ஒழுக்கத்து நீத்தார் பெருமை = தமக்குரிய ஒழுக் கத்தின்கண்ணே நின்று துறந்தாரது பெருமையை – விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு = விழுமிய பொருள்கள் பலவற் றுள்ளும் இதுவே விழுமிதெனை விரும்பும் நூல்களது துணிவு.

தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது– தத்தம் வருணத்திற்கும், நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவா தொழுக அறம் வளரும். அறம் வளரப் பாவந்தேயும். பாவந் தேய அறியாமை நீங்கும். அறியாமை நீங்க நித்த அநித்தங் களது வேறுபாட்டுணர்வும், அழிதன் மாலையவாய இம்மை மறுமை இன்பங்களினுவர்ப்பும், பிறவித் துன்பங்களுந் தோன் றும். அவை தோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம், அஃதுண் டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சியுண்டாம். அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென் பதும், அகப்பற்றாகிய யானென்பதும் விடும். ஆதலான் இவ் விரண்டு பற்றையும் இம்முறையே யுவர்த்து விடுதலெனக் கொள்க. .... விரிவஞ்சி அதிகம் கூறவில்லை.

இவ்விலக்கணங்கள் அழைப்பிதழ்களில் குறித்து வரும் எவருக்காவது உண்டா எனச் சிந்திக்கவும்.

SAIVA SIDDHANTA AND SOCIAL CONCERN

Dr. V. A. Devasenapathi

How is the world kept going? To this question, a Tamil poet of the Sangam age gives the following answer: "The world exists and is kept going, because of a few choice souls. What are their characteristics? They are such unselfish persons that even if that rare and sweet thing, ambrosia comes their way, they will not enjoy it themselves without sharing it with others. They have no aversion for any one or for anything. Their strength of mind is such that they are quite unlike others who, afraid of difficulties, do not launch on new activities. They wiil lay down their lives in the discharge of duties that will win them renown. On the otherhand, they will desist from a deed that will expose them to infamy even if such a deed were to give them the whole world as its reward. Being the personification of such majesty, all their resolute efforts are in furtherance of the well-being of others. They never live for themselves." This is a noble conception indeed!

Is there in Tamil Philosophy, especially Saiva Siddhanta, a metaphysical basis to sustain this lofty Social Ethics? What is the metaphysical status of the souls? The Tamil expression 'மன்னுயிர்' is significant. It means 'abiding soul'. In other words, there is no time, when the souls were not or will not be. They exist through all the three phases of time—past, present and future. They are termless and they are

The above article is reproduced with the kind permission of the Editor of 'Saiva Siddhanta',

many. What is the need for concern for them? The Siddhantin's reply would be that there is need for social concern, not only in so far as the weal of the individual souls in this world is concerned but also in regard to their total well-being through all eternity. The souls are afflicted by three bonds, anava, karma and maya and the shedding of these bonds is the final destiny. It is said that the spiritual endeavour of higher developed souls with two bonds or with one, is directed towards lifting up souls with three or two bonds respectively. In other words, those who unmindful of their own burden, endeavour to lighten the burden of others,get rid of their own in the process, even as persons struggling against sleep in snowy regions, save themselves incidentally by carrying those who have been overpowered by sleep. Spiritual growth consists in becoming less and less self-centred. This does not mean that the culmination of this process is a kind of spiritual annihilation. On the contrary, there is enlargement of personality in the measure in which the self ceases to be self-centred and becomes God-centred.

Saiva Siddhanta seeks to establish not only the existence of soul as different from God or the Supreme Soul on the one hand and body or matter on the other but it also seeks to establish a plurality of souls. These souls go up and down in the scale of spiritual evolution by the quality of the lives they lead. Birth in sub-human forms of life is not a permanent punishment but is only a corrective phase in their spiritual career even as birth in super-human forms as celestials is another phase. Till they realise that they should outgrow their egoism, their sense of "I" and "mine", and find their true centre in God, souls are subject to

the cycle of births and deaths. The state of release for Saiva Siddhanta, is a state of release from egoism and its attendent evils, not a merger in such a way that the soul ceases to exist as a separate entity. Similies like the river mingling in the sea are given, no doubt, to illustrate the union, but these are to be understood as emphasising the intimacy of the union, not the annihilation of the soul. Thus, the released soul is better equipped to serve society than a bound soul. Like the Lord Himself, the released soul acts for the welfare and emancipation of souls in bondage.

Saiva Siddhanta contemplates a spiritual society –a Sivarajya in which the souls, purged of their impurity, viz, egoism, enjoy full membership. Thus, membership of the moral realm is a preparation for membership of the spiritual realm. An indication of this is seen when the saints, who are emancipated souls, meet. Their time is spent in adoring God and serving His creatures. They minister unto the souls in bondage on the physical, moral and spiritual levels. Physical hunger and disease, no less than moral lapses and spiritual degradation, are the objects of their concern. They strive to transform society and make it a miniature Siva-rajya; they endeavour not to abandon the world but to transform it; they would like, that, as in their own case, in the case of others also, jiva–karanas or human instruments are transformed into Siva-karanas or divine instruments.

Saiva Siddhanta metaphysics thus provides a basis for social concern in the widest sense of the term. It lays the foundation for the City of God on earth.

அவன் அருளே கண்ணுகக் காணல்

திரு. த. சோமசுந்தரம் அவர்கள்,
இளங்கலை இரண்டாம் ஆண்டு,
பழனி ஆண்டவர் இந்தியப்பண்பாட்டுக் கல்லூரி, பழனி.

வாளுகி, மண்ணுகி, வளியாகி, ஒளியாகி, ஊனுகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையும் ஆய், எல்லாம் தாளுகி இருக்கும் பரம்பொருள், பாலிற்படுநெய்யினனுகவும், இருந்து தீயிற்படு புழுவாய்த் துடிக்கும் உயிரைப் படைத்தது. விண்ணையும், மண்ணையும், கண்ணையும் படைத்தது. அதன் காரணமாகி, அழிவுறும் உயிர்கட்குத் தெளிவுறும் அறிவாகி, இன்னல் துடைத்தது. பிறவிப் பெருவழி அடைத்தது. எதளுலே? அவனருளாலே அவன்ருள் வணங்கிய காரணத்தாலே.

அறக்கருணை காட்டும் இறை, பிறவிப் பெருங்கடலின் பெருந்துறை; கரந்துறையும் இறைவன் தன்னை மறந்துறையும் உயிர்கட்கு உணர்வூட்டும் உணர்வாகி இருக்கின்ருன்; மறக்கருணையால் நம் துன்பம் மறுக்கின்ருன்.

மும்மலங்கள் சூழ தன்னலங்கள் மாறி நிற்கும், தன்னலங் கொண்ட ஆன்மா, உய்யுமாறு இன்றி, தன்னிலை தொய்யுமாறு செய்கின்ருன் இறையவன்; நமக்கெல்லாம் மறையவன். மறையும் அவனே; இறையும் அவனே; அன்பும் அவனே; துன்பமும் அவனே; இன்பமும் அவனே.

கண்கெட்ட காலத்துப் புண்பட்ட நெஞ்சோடு ஞாயிற்று வணக்கம் செய்தல் போல இருந்தாலும், முன்னுள், தன்னுல் செய்யப்பட்ட முயற்சிகளெல்லாம் தளர்ச்சியுற, வளர்ச்சியற, பயனற்றுப் போக, வாழ்வு துயருற்றுப்போகும்போது, ஐவரும் கைவிட்டு மெய்விடும் நிலையில் உன் அடைக்கலமே என்று அழுகின்றபோது, அவன் திருவடியில் விழுகின்றபோது, வாடுகின்ற பயிரை மழை வந்து காப்பதுபோல, வாடுகின்ற உயிரை ஆடுகின்ற இறைவன் நாடுகின்ருன். நிலந்தன் மேல் வந்தருளி நீள்

கழல்கள் காட்டுகின்ருன். இன்னருள் பொங்கும் தன்னருள் பொங்க, நம்மிடை வந்து தங்க அருள் செய்கின்ருன்.

அந்நிலையில்தான் அவன் திருவடிநீழல், மாசில் வீணையாகவும், மாலை மதியமாகவும், வீசு தென்றலாகவும். வீங்கிள வேனிலாகவும், மூசு வண்டறை பொய்கையாகவும், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவாகவும், தருநிழலாகவும், ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராகவும, மேடையிலே வீசுகின்றமெல்லிய பூங்காற்ருகவும், மென்காற்றில் விளைசுகமாகவும் தெரிகின்றது; நமக்கது புரிகின்றது.

அறக்கருணையாலேயே இறைவன் உலகை உய்விக்கக் கூடாவா? மறக்கருணையாலே அதைச் செய்வித்தலால் உயிர்கள் வாடாவா? என்ற கேள்வி எழுகின்றது. நல்லகேள்வி. மிகவல்ல கேள்வி. பொல்லாக்கேள்வி. பலர் பதில் சொல்லாக் கேள்வி.

முள்ளை முள்ளால் எடுத்தல்போல, நெஞ்சகத்து வஞ்சகத்தை வஞ்சகம் மாற்றுவது போல, நோய்மாற்று மருந்துக்கு நாம் மாற்று மருந்து கொடுப்பது போல, விசையை விசையால் அசைத்தல் போல, இனிமைக்கு இனிமை ஊட்ட சாரமுற்ற காரம் கொள்வது போல, தீமையைத் தீய்க்க, மாய்நிலை மாய்க்க, காய்நிலை போக்க வந்த சாய்நிலையாக, இன்பம் தோய் நிலையாக, பால் நினைந்தூட்டும் தாயின் நிலையில், நம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிகின்ருன். மானினை உடன் கொண்ட மன்னவன். அவன் இன்னவன். சொல்லாமற் சொன்னவன்.

அவன் அருளைக் கண்ணுகக் கொண்டால், அதன் வழி நாம் கண்டால், உண்மையை உணர்வோம். அதன் வழி உயர்வோம். அந்நிலையில் உற்ருரை நாம் வேண்டோம்; ஊர் வேண்டோம்; பேர் வேண்டோம்; கற்ருரையும் நாம் வேண்டோம்; குற்ருலத் தமர்ந்து இனிதுறையும் கூத்தன் அருளால் கற்பனவும் இனியமையும்.

இதை நாம் வாழ்க்கையில் காணவேண்டாமா? காணவில்லையா? கண்டோமே. அன்று வந்தாரே குமரகுருபரர்,

அடுத்துக் கண்டோமே நாவுக்கரையரை! வந்திருந்து அருள் பெற்ற சுந்தரரைக் கண்டோமே! இவர்கள் வாழ்வாலே, இவர்கள் வாழ்விலே, நாம் கண்டதென்ன? அவன் அருள் முன்னின்று காட்டக் கண்டோமே; உலகில் தாமே வெளி வந்து அவன் திருவருள் நெறி நாட்டக் கண்டோமே. இப்படியன். இவனிறைவன், இவ்வண்ணத்தன் என்றெழுதிக் காட்டொணாத இறையை "தோடுடைய செவியன் விடை யேறியோர் தூவெண் மலர்சூடி" என்றெல்லாம் சுட்டொணாத சுட்டுப் பொருளைச் சுட்டிக் காட்டினாரே, சமணர் செய்த தீமையெல்லாம் வெட்டிக் காட்டினாரே, ஆளுடையபிள்ளை-எப்படி? "அவன் அருளே கண்ணாகக் காணினல்லால்" இவையெல்லாம் நடக்கக் கூடுமா? நம் உள்ளம் அவர் தம் புகழ்தான் பாடுமா?

"சுற்றி நில்லாதே; பகையே; துள்ளி வருகுது வேல்" என்றார்களே! ஏன்? வேலை ஏன் சொன்னார்கள்? வேலை இல்லாமலா?

வேலைப், பெண்களின் கண்களுக்கு உவமை கொள்வார்களே? அப்படியேயாயின், வேல், பெண்ணின் கண்ணல்லவா? அன்னை சக்தியின் உருவம், பெண்ணல்லவா? சக்தி தரும் அவ் வேல், முக்தி தரும் செவ்வேல், – சக்திவேல் என்று பெயர் பெற்றதும் – இப்படித்தானே? சக்தி, யார்? அருள் வடிவு அல்லவா? எனவே அருளில் இருந்து வருவது அருளல்லாமல், இருளாகவா இருக்கும்? இதனால்தான், இறையருள் வருகின்றது என்று சொல்லாமல், துள்ளி வருகுது வேல் என்று சொன்னார்கள் என்றால் அது பொருந்தாதா?

நில்லாத நீர் சடை மேனிப்பித்தன் நினையாத நம் நெஞ்சை நினைவிக்கின்றான்; காணாதன வெல்லாம் காட்டுவிக்கின்றான்; ஆட்டுவிக்கின்றான்; கூட்டுவிக்கின்றான். நம்மை அவன் பணியில் நாட்டுவிக்கின்றான்; பாட்டுவிக்கின்றான்; பணிவிக்கின்றான். மணிவாசகர் வாழ்விலும் இதைக் காணுகின்றோம். நல்லார் வாழ்விலும், பொல்லார் வாழ்விலும், இல்லார் வாழ்விலும், எல்லார் வாழ்விலும் தானே நின்று, வழியறியா உயிருக்கு வழியாகவும், அதன் ப ழி ய ா க வு ம் நின்று, ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவாகவும், அதன் செறிவாகவும் நின்று, அன்பின்

வழியறியாத உயிரைத் தொடர்ந்துச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுகின்ருன், உயிர் பொக்கெனப் போகும் போது; இந் நிலையில்தான், 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே' என்று உயிர் சாமர்த்தியம் பேசுகின்றது.

துட்ட மிருகம் முதலானவையும், எவ்விடத்து வந்து எம்மை எதிர்த்தாலும், அவ்விடத்தே பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும் கொண்டு இறைவன் தோன்ற வேண்டும் — என்ருரே? அங்கு அவன் அருள்தானே வந்து வழிகாட்டும்?

நிற்க. மனமெனுந் தோணிபற்றி, மதியெனும் கோலை யூன்றிச், சினமெனும் சரக்கை ஏற்றி, செறிகடல் ஓடும் போது, மதமெனும் பாறைதாக்கி மறியும் போது, நம்நிலை புரியும். அப் போது கரமெலாஞ்சென்னி தூக்கி, அவனருள் உன்னிப் போற் றின், கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாக வரும். இன்பம்தரும். இதற்கும் அவனே, அந்தச் சிவனே பொருள். அதுவே இருள்; அதுவே அருள். அருளே கண். அஃதில்லா வாழ்வு? என்ன வாழ்வு?

அவனே தானேயாகி நின்று, முத்திநெறி அறியாத மூர்க்க ரொடு முயல் வேனைப், பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம், சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாள அந்த அத்தன் வாராவிடில், அவனேதானே ஆகி நின்று, அவன் அருள் வழிகாட்டா விட்டால், அவன் அருளே கண்ணுகக் காணி னல்லால் என் செய்கேன் ஏழையேனே? யார்தான் என்ன செய்ய முடியும்?

பட்டி மண்டபம்

திரு. ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள்,
ஆதீன சமயச் சொற்பொழிவாளர்,
அம்பாசமுத்திரம்.

"கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே" (திருவாசகம்)

மாணிக்கவாசகப்பெருமான், திருவாசகத்தில் சிவபெருமான் தன்னை ஆட்கொண்ட பின், தான் அடைந்த நன்மைகளை யெல்லாம் அருளியுள்ளார்.

இந்தத் திருவாசகத்தில், "விடையை (ரிஷபம்) ஊர்தியாக வுடைய சிவபெருமானே, எட்டும் இரண்டும் பத்து, அதைச் சேர்த்து எண்ண அறியாத சிறியேனை, பாசப் பிணிப்பை அகற்றி அடிமை கொண்டு திருநீறணிந்த மெய்யடியாரோடு, மற்றை அன்பர்களும் கண்கூடாகக் காணும்படி, சமயவாதம் புரிதற் குரிய வித்தியா மண்டபத்தில் ஏறி வீற்றிருக்கச் செய்தனை. இதற்கு யான் செய்யத்தக்க கைம்மாறு யாதுவுளது?

மற்றொருகருத்து:- எட்டு (அ) இரண்டும் (உ) அ + உ = ய. பத்து. சிவாயநம என்பதில் "ய" உயிரைக் குறிக்கும். என்னைப் பற்றி யான் தெரியாத காலத்தில், எனக்கு அறிவித்ததைக் குறிக்கும்.

மற்றொருகருத்து :— எட்டு இரண்டும் அ + உ + ம் = ஓம். ஓம் என்ற பிரணவ ரகசியம் தெரியாதிருந்த எனக்கு அதன் உள்பொருளை அறிவித்ததைக் குறிக்கும் என்பர்.

இங்கு பட்டிமண்டபம் "வித்தியா மண்டபம்" எனப்பொருள் தருகிறது. எல்லாச் சமய நுட்பங்களையும் அறிந்து, அநுபவ

முடையவர்கள், உள்ளத்தில் உணர்ந்த, உண்மையை அறம் கிடந்தவாறு, மக்களின் ஐயங்களை நீக்கித் தெளிவுறச் செய்வது ஆகும்.

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்" (திருக்குறள்.)

சிலப்பதிகாரம் 5. இந்திரவிழவூரெடுத்த காதை (101) வரி.

"மகதநன் னாட்டு வாள்வேய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த **பட்டிமண்டபம்**"

என்று கூறப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருவிழாக்களில் சமய உண்மைகளைத் தெரிந்துகொள்ள பட்டிமண்டபம் அமைத்தல் காணப்படுகிறது. இங்கும் வித்தியா மண்டபமாதலைக் குறிக்கிறது.

மணிமேகலை 1, விழா வறைகாதை 58 முதல் 53 வரிகள்.

"தண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்று மாக்கள் தம்முடனாயினும்
செற்றமுங் கலாமுஞ் செய்யாது அகலுமின்"

பொருள் :— குளிர்ந்த மணலுடைய பந்தர்களிலும் பலரும் தங்கும் அம்பலங்களிலும் நன்ருகிய அறவுரை அறிவீர் உரைமின். தம்தம் சமயத்திற் பொருள்களைக் குறித்து வாதிக்கும் சமயவாதிகள் வித்தியா மண்டபத்தில் ஏறுமின். பகைவரோடாயினும் சினமும் போரும் செய்யாது நீங்குமின்.

திருக்கோயில்களில் நடைபெறும் பட்டிமண்டபம் சமய உண்மைகளை மக்கள் தெளிவாய் அறிந்து கொள்வதற்காக நடத்தப்பெறவேண்டும். பலநூறு ரூபாய்களைச் செலவுசெய்தும் பயனில்லாமல் போகக்கூடாது. மக்கள் வந்து ஏமாந்து விடக்கூடாது. இதை ஓலக்க மண்டபம் என்றும் சொல்போர்க்களம் என்றும் கூறுவர்.

சங்கற்ப நிராகரணம். சைவ சித்தாந்த சாத்திரங்களில் இறுதியான நூல். இந்த ஒரு நூலை நன்ருகக் கற்ருல் எல்லாச் சமய உண்மைகளையும் நன்ருய்த் தெரிந்து கொள்ளலாம். அதுவுந் தவிர பட்டி மண்டபத்தில் அமர்ந்து பேசுகின்றவர்கள் எப்படி வாதம் செய்ய வேண்டுமென்று தெரிந்து கொள்ளலாம்.

பாயிரம்: வரி 44 முதல் 49 வரை.

"மற்றவர் உரைத்த சொல்தரு பொருள்கொடு
வாத செற்ப விதண்டையும் ஏதுவும்
ஓது நால்வகை உவமையும் திகழ்தர
அருள்சேர் மாந்தர் வெருள் சேராமல்
தர்க்கமும் விடையமு கற்க
நற்கவி மாந்தர் நகநவிற்றுவர்"

இதன்பொருள் :— பட்டிமண்டபத்தில் வாதம் செய்கின்றவர்கள் தங்கள் கொள்கையில் தெளிவான அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். நம்பிக்கையுடையவர்களாக வாழ வேண்டும். பிறரிடம் உள்ள கொள்கைகளை, நன்ருய்க் கேட்டுச் சிந்தித்துத் தர்க்க முறையில் நீதி, அறம், பண்பு, இவைகளுக்கு மாறுபடாமல் மறுக்க வேண்டும். தன்னுடைய கொள்கையை மக்கள் மனங்கொள்ளும் வகை தெளிவாக நூல் ஆசிரியர் கருத்திற்கு மாறுபடாமல் உவமைகள் மூலம் விளக்கவேண்டும். பட்டிமண்டபத்தால் நியாயம் பிறக்கவேண்டும்.

(வாதம் - (விகாரம்); செற்பை,விதண்டை, ஏது-(காரணம்); உவமை - ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை.)

அருள்சேர்மாந்தர்களின் உள்ளம் உண்மையை உணர வேண்டும்.

தயவுசெய்து, பட்டிமண்டபம் நடத்துகிறவர்கள், அதிற் பங்குகொள்கிறவர்கள், முன்ஞேர் கொண்ட முறையை கைக்கொண்டு மக்களுக்கு உதவவேண்டும்.

"ஒன்ருனும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்ருகாது ஆகி விடும்.

நடராசர் தத்துவம்

திருமதி. N. சரசுவதி அவர்கள்,
நூல்நிலையாளர்.
ஜீவாபாய் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, திருப்பூர்.

சிவபெருமானது உருவத்திருமேனி மகேசுவரம் எனப்படும். அது இருபத்தைந்து வடிவ வேறுபாடுகளை உடையது. அறுபத்து நான்கு என்று கூறுவதும் உண்டு. அது சிவபராக்கிரமத்தில் கூறப்படும்.

அவை ஒவ்வொன்றும், ஆன்ம வர்க்கங்கள் தம்மைப் போற்றி வழிபடுமாயின் அவ்வப்பயன்களை விளைத்தற்கு இறைவன் எடுத்த திருக்கோலமாகும். அவை உமையொருபாகர், சந்திரசேகரர், பிட்சாடனர், சோமாஸ்கந்தர், நடராசர் முதலான திருமேனிகளாம். அவற்றுள் நடராசப்பெருமானது திருவுருவம் பல கருத்துக்களை அடக்கியுள்ளது என்பர். அவற்றுள் திருவாசிகை பிரணவமாகிய ஓங்கார வடிவம் என்றும், அதில் அமைத்துள்ள சுடர் உருவங்கள் ஐம்பத்தொன்றும் வடமொழியிலுள்ள உயிரு மெய்யும் ஆகிய ஐம்பத்தொரு எழுத்துக்களைக் குறிப்பதென்றும், அவன் வடிவம் தூலபஞ்சாக்கர (நமசிவாய என்பது) வடிவமாகவும், சூக்கும பஞ்சாக்கர (சிவயநம) வடிவமாகவும் அமைந்தது என்றுங் கூறுவர். அவயவயங்களில் உள்ள பொருள்கள், ஒவ்வொரு தத்துவத்தைக் குறிப்பன. திருவுருவச் செயல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தைக் குறிப்பன என்றும் கூறுவர். அதனைச் சைவசாத்திர நூல்கள் பதினான்கில் ஒன்றாகிய,

'ஓங்கார மேநற் றிருவாசி யுற்றதனி
னீங்கா வெழுத்தே நிறை சுடராம்'

என்னும் கவியால் அறிக.

தூலபஞ்சாக்கரவடிவம்

திருவடி - நகரம், வயிறு - மகரம், தோள் - சிகரம், முகம்-வகரம், திருமுடி - யகரம் ஆகும். இதனை

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரங் — கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாடியப் பார்.

என்னும் உண்மை விளக்கப் பாசுரத்தால் அறிக.

சூக்கும பஞ்சாக்கர வடிவம்

உடுக்கை யேந்திய கரம் - சிகரம், நன்றாக வீசியாடும் கரம் - வகரம், அபய கரம் - யகரம், அனல் ஏந்திய கரம் - நகரம், முயலகனை ஊன்றிய திருப்பாதம் - மகரம் ஆகும். இதனை,

'சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகர
மார்க்கும் யகர மபயகரம் — பார்க்கிலிறைக்
கங்கி நகர மடிக்கீழ் முயலகனார்
தங்கு மகரமது தான்.

என்பதால் உணரலாம்.

ஐந்தொழில்

உலகசொரூபியாய் நடராசப்பெருமான் அசைந்து ஆடுவதனால் உலகம் இயங்குகின்றது. அவர் நடனத்தை நிறுத்துவாரேயானால் உலகில் ஒன்றும் நிகழாது. ஆக ஐந்து தொழில்களும் அவர் திருவுருவில் காண்பர். அவை:— சிருட்டி, திதி, சங்காரம், திரபவம், அநுக்கிரகம் என்பன. இவற்றைத் தமிழில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனக் கூறுவர். இவ்வைந்து தொழில்களுள் உடுக்கை ஒலிப்பது உலகப் படைப்பைக் குறிக்கும். உலகில் தோன்றும் ஒவ்வொரு பொருள்களும் ஒலியினாலே தோன்றுகின்றன என்பது ஒரு கொள்கை. அபயகரம் - காத்தலைக் குறிக்கும். அனல் - அழித்தலைக்குறிக்கும். முயலகனை ஊன்றியதாள் - மறைப்பைக் குறிக்கும். ஆட எடுத்திட்ட பாதம் - முத்தி அருளலைக் குறிக்கும். இதனை,

தோற்றந் துடியதனிற் ேறயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார முற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

என்பதால் தெரிக.

உடுக்கை விசுறுதலால் — மாயாமலத்தை ஒழித்தலும், அனலை ஏந்துதலால் — கன்மமலத்தை நசிப்பித்தலும், ஆணவ மலத்தை அடக்குதலும்; தூக்கிய திருவடியால் — ஆன்மாக்களை மலத்தினின்று விடுவித்தலும்; அபயங்காட்டும் திருக்கரத்தினுல் முத்தி அருளலும் குறிக்கும் என்பர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

[ஏழாம் திருமுறை]

★ புதிய பதிப்பு ★

(விசுவாவசு ஆண்டு வைகாசிப் பூச வெளியீடு)

350 பக்கம் வெள்ளைத்தாள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு, அவரைப்பற்றிய கல்லெழுத்துக் குறிப்புக்கள் ஆகியவை, அடங்கியது, தனிப்பிரதி அடக்க விலை ரூ. 1–30.

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்குமேல் வாங்குவோருக்கு 20% கழிவு.
(தபால் செலவு வேறு)

கிடைக்கும் இடங்கள்:—

1. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்,
ஸ்ரீவைகுண்டம்.
(திருநெல்வேலி மாவட்டம்.)

2. திரு. க. சுப்பிரமணிய ஐய்யர் அவர்கள், B. A.,
தியாகராச விலாசம், 53, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை — 5.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 17. இதழ் 11-ன் தொடர்ச்சி]

III

SUNDARAMURTI SWAMI

(Abbreviated as SUNDARAR)

Sundarar is sure that Siva will understand his perplexities in supplying the needs of his fair ladies. For does not Siva Himself bear the burden of two ladies, Parvati his consort, and Ganga (lady Ganges) in his hair? Sundarar, in the legend with which these verses are connected, when one of his wives was suffering hunger, miraculously received some uncooked rice from Siva. This was not enough; to complete the miracle Siva must remove the rice for him to Arur the abode of his fair one. This too was done in answer to the hymn of which the next two stanzas are a sample.

75. நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே.

75. Ever I think but of Thee;
Daily in worship I bow;
She of the sword-piercing eyes,
Leave her not suffering now.
Kolili's lord, Thou didst give
Rice in Kundaiyur this day.
No man to bring it have I,
Bid it be sent me, I pray.

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

திருவாதிரைத் திருநாள்

வித்துவான். வெ. சுப்ரமணியன் அவர்கள்,
தமிழாசிரியர்,
திரு வெங்கிடகிருஷ்ண உயர்நிலைப்பள்ளி,
கணியூர். கோவை.

உயிர்கள் அனைத்தும் இன்பத்தையே நாடிக்கொண்டிருக்கின்றன. அவ்வின்பம் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும். சிற்றின்பமோ அழியுந் தன்மையது; நிலைத்திராது. பேரின்பமோ என்றும் அழியாது நிலைத்திருப்பது. அவ்வந்தமில் இன்பமாய பேரின்பம் உயிர்கள் மக்கட் பிறவியால்தான் அடைய முடியும். ஏனெனின் ஆறறிவு பெற்றவர் மக்கள். ஆறுவது அறிவாகிய மன அறிவால் பகுத்தறிந்து செய்பட வல்லது, மக்கள் பிறவியே. எனவே மக்களுக்கே உரியதாக வழங்குவது பேரின்பமாகும். "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற்றலரிது" என்ற வள்ளுவர் வாய்மொழிப்படி வரம்பில் இன்பமுடைய சச்சிதானந்தமாய இறைவனது அருளைப் பெற்றவர்களே பேரின்பத்தைப் பெற்றவராவர். அவ்வாறு மக்கள் இறைவன் அருளைப்பெற வழிகாட்டியாக அமைந்திருப்பதே மதம். மக்களுயிர்க்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை விளக்குவதே அஃது. இது சைவம், வைணவம் என்ற இரண்டாயமைந்துள்ளது. இவ்விரண்டும் இந்துமதத்தின் இருகண்களாகும். சூரிய சந்திரரால் உண்டாக்கப்பட்ட சூரிய குல சந்திர குல அரசர்களால் வளர்க்கப்பட்டதாகலின் இந்து மதம் என்னும் பெயரைப் பெற்றது. இந்து மதத்தில் சைவம் அப்பன் அம்சமாயும் வைணவம் அம்மை அம்சமாகவும் திகழ்கின்றதாகலின் இந்து மதத்தை அர்த்த நாரீசுர வடிவம் எனலாம்.

சைவம், வைணவம் ஆகிய விரு நெறியும் செந்நெறியாதலால் இவ்விரண்டும் சன்மார்க்கம் எனப்பட்டது. சிவம் சம்பந்த

முடையது சைவம். சிவம் என்றால் மங்களம், செம்பொருள், அன்பு, ஆனந்தம் எனப்பல பொருள்கள் உண்டு. சிவம் தோற்றத்தில் செந்நிறமும், பண்பிற் செம்மைப் பண்பும் உடையதாகும்.

"செம்மையே யாயசிவ பெருமானே
செம்பொருள் துணிவே சீருடைக் கழலே."

ஒருவனே தேவன்: மனமொழி மெய்களைக் கடந்தவராயும், உள்ளவராயும் விளங்குகின்ற கடவுள் உயிர்களை ஈடேற்ற வேண்டி ஐந்தொழில்களைச்செய்ய மேற்கொண்டருளிய மூர்த்தம் சச்சிதானந்த உருவமாகும். இந்தச் சத்து, சித்து, ஆனந்தம் என்ற முக்குண சிவன் அருட்சத்தியை அணையும்போது முறையே கிரியா சத்தி, ஞானசத்தி, இச்சா சத்தி என்ற நாமத்தை அடைந்து, கிரியா சத்தி அரசகுண (ரஜோ) மாயையில் பிரதி பாலித்துப் படைத்தல் தொழிலைச் செய்யும் பிரமனாகவும், ஞானசத்தி, சத்துவ குணமாயையில் பிரதிபலித்து காத்தல் தொழிலைச் செய்யும் திருமாலாகவும், இச்சாசக்தி, தாமோதகுண மாயையில் பிரதிபாலித்து அழித்தல் தொழிலைச் செய்யும் உருத்திரனாகவும் உருவங்கொண்டனன். இவ்வாறு ஒன்றே மூன்றாக விரிந்தது. "ஓர் உருவம் மூவுருவம் ஆனநாளோ'' என்று அப்பரும், 'மூவுருவும் கண்டபோ(து) ஒன்றாஞ் சோதி' என்று திருமங்கை யாழ்வாரும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். வெண்ணிற சோதிக் கதிரவன் எந்தநிறக் கண்ணாடியில் பார்க்க படுகிறதோ அந்த நிறமாகக் காணப்படும். அஃது போன்று, நிறங்கள் ஓர் ஐந்துடை இறைவனின் சொரூப இலக்கணம் அருட்பெருஞ்சோதி. அதனைச் செந்நிற மேனியாகக் கண்டவர்கள் சிவன் என்று கூறினார்; நீமமேக சாமளநிறமேனியாகக் கண்டவர் திருமால் என்றனர்; பொன்னிற மேனியாகக் கண்டவர் பிரமன் என்றருளினார். ஆனால் அவர்கள் கண்டு கூறிய பொருள் ஒன்றே என்பதை 'ஒருவனே தேவன்' என்ற வாக்கானுணர்த்தியுள்ளனர்

மார்கழித்திங்கள்: உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும், இறைவனின் வரம்பில் ஆற்றல், அறிவு, அன்பு ஆகியவற்றையும், ஐந்தொழில்த் தத்துவங்களையும் மக்களுக்கு

அறிவுறுத்தவே கிரியைகளான சடங்குகள், பண்டிகைகள், திருவிழாக்கள் முதலியவற்றைச் சமயங்களில் பொருந்தி வைத்துள்ளனர். இவைகளுள் ஒன்று தான் மார்கழித் திங்கள் நீராட்டமும், பாவை நோன்பும், ஆதிரைத் திருநாளும்.

நமக்கு ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாளாகும். தேவர்களுக்குத் தைத்திங்கள் முதல் ஆனித் திங்கள் வரையுள்ள ஆறு மாதங்களும் பகலாகவும், ஆடி முதல் மார்கழி வரையிலுள்ள ஆறுமாதங்களும் இரவாக இருக்கிறது. அஃதாவது நமக்கு ஓராண்டு தேவர்களுக்கு ஒருநாள் ஆகும். பிரம்மாவுக்கு கல்பம் பகலாகவும், பிரளயம் இரவாகவும் அமைந்துள்ளது. இவ்வாறே பலகோடியாண்டுகளைக் கொண்ட மகா கற்பமும், மகா பிரளயமும் சேர்ந்து சிவனுக்கு ஒரு நாளாகும். ஆதலால் மார்கழித் திங்கள் இரவு கழிந்த (பிரளயம், மகா பிரளயம்) அந்தியாகிய வைகறைப் பொழுதையும், தைத்திங்கள் கல்பத்தின் (பகலின்) உதயத்தையும் உணர்த்துவதாகும். நாம் வைகறையில் துயிலெழுந்து இறைவனைத் தொழுது பகல் வேலைகளுக்குத் தயாராகுவது போல தேவர்களும் வைகறைப் பொழுதாகிய மார்கழியில் விழித்தெழுந்து இறைவனைத் தொழுது நிற்கவும், இறைவன் அறிதுயிலினின்று (யோக நித்திரையிலிருந்து) பள்ளியெழுந்து படைத்தல் முதலாகவுள்ள தொழிலுக்கு முனைகின்றனர். எனவே உலகப் படைப்புத் தொடங்குவது மார்கழித் திங்கள் ஆகும் என்பதை அறியலாம். மார்கழிக்குரிய ஒன்பதாவது இராசியாகிய தனுசும் படைப்புத் தொழிலுக்கான நவநாயகர்களையும் நவசத்திகளையும் உணர்த்தி நிற்கிறது. ஒவ்வொரு மாதத்தில் வரும் பௌர்ணமியன்று உதயமாகும் விண்மீனைக் கொண்டு அம்மாதத்தின் பெயரும் பெருமையும் உண்டாயிற்று. மிருக சீருஷ நட்சத்திரத்தில் நிறைமதி உதயமாகுவதால் இம்மாதம் மார்கழி எனப் பெயர் பெறுவதாயிற்று.

மார்கழியின் தெய்வத் தன்மை: மார்கழித் திங்களுக்கு உரிய விண்மீன் திருவாதிரையாகும். அதன் அதிதேவதை பரமசிவன். திருவாதிரையின் மீன் சூரியனை விட இருபது மடங்கு பருமனும் 270 மடங்கு ஒளியும் உள்ளது, என

நூலறிஞர் கூறியுள்ளார். சிவ நட்சத்திரமான திருவாதிரையில், படைப்புக் காலத் தொடக்கமான மார்கழித் திங்களில் சிவபெருமான் செயல்படத் துவங்குவதின் சின்னமாக ஆனந்தக் கூத்தாடுவது சிருட்டித் திரு நடனமாகும். அதனால் இறைவன் நடராசன் என்ற பெயரையும் பெற்றார். திருமாலாகிய கண்ண பெருமானும் "மாதங்களில் மார்கழி நான்" என்று உரைத்தருளியுள்ளார். புத்தர்களும், சமணர்களும் மார்கழியில் விழாவெடுத்துக் கொண்டாடினர்.

"மக்கள் செய்த பாவங்களை யானே சுமக்கிறேன். பிரமண்டலத்தின் பிதாவிடம் மன்னிப்பு அளிக்க வேண்டுகிறேன். அன்பு, அறம், உண்மை ஆகியவற்றை உரைத்ததனால், அறியாமையினால் எனது உடலைச் சிலுவையில் அழிக்கும் இவர்களை இறைவனே மன்னித்துக் காப்பீராக" எனத் தியாகத் திருமொழிகள் கூறியருளிய இயேசுபிரான் பிறந்தநாள் விழாவும், புத்தாண்டுமாகக் கிருஷ்தவர்களுக்கு, புனிதமாய் அமைந்திருக்கும் மார்கழித்திங்கள் தெய்வத்தன்மையுடையதன்றோ!

மார்கழி நீராடல்: நீராடுதல் என்பது நாடோறும் நிகழும் செயலாகும். அதனாலன்றோ "கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக் குடி" என்னும் பழமொழி வழங்குகின்றது. வள்ளுவரும் மக்களுக்கு நீரின்றி, ஒழுக்கம், தவம், தானம், பூசனை, ஆகியன இல்லை என்றும் கூறியுள்ளார். மார்கழியும் தையும் ஏமந்த ருதுவாகிய முன்பனிக் காலமாகும். கதிரவன் கிரணங்கள் வெம்மையை அளிக்காத இம்மாதத்திலே சந்திரனின் தண்ணிய கிரணங்களும், பனியும் தோய்ந்த குளிர் நீரில் வைகறையில் நீராடினால் நோயின்றி வாழலாம். உடல் வன்மையும் குருதி ஓட்டமும் உண்டாகும். தெளிந்த மனத்துடன் இறைவனைத் தொழுது அவனது திருவருளுக்கு உரியவராகி நன்னிலை பெறலாம். மார்கழித்திங்கள் முழுதுமே நீராடற் சிறப்பைப் பெற்றுள்ள தாயினும் மதிநிறைந்த திருவாதிரைத் திருநாளே மிகச்சிறந்ததாகும்.

"மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க" (பரிபாடல்)

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"
(திருப்பாவை)

"ஆதிரைநாள் முன்னீர் ஐந்தாகிய தினங்கள்எல்லாம்
புனல் தடம் ஆடல் செய்வார்."

பாவை நோன்பு: பழம் பெருமையுடைய சங்க நூல்கள் வாயிலாகவும் மார்கழி நோன்பாகிய பாவை நோன்பைப்பற்றிய செய்திகளை அறியலாம். திருமணமாகாத கன்னிப் பெண்கள் வைகறையில் துயில் நீங்கி எழுந்து ஆறு, குளம் முதலிய நீர் நிலைகளில் நீராடி ஈரமணலால் படிமம் அமைத்து அதனை உமா தேவியாகக் கருதி வழிபட்டனர். இதுவே பாவை நோன்பு எனப்பட்டது. பரிபாடலில் பாவை நோன்பை அம்பாவாடல் என்று உரைத்துள்ளார். மையிட்டு, மலர்சூடி, அலங்காரம் செய்து கொள்ளாமலும் நெய் பால் கலந்த உணவை உண்ணு மலும், புறங் கூறுமை முதலிய பாவ காரியங்களைச் செய்யா திருத்தலும் ஆகிய விரதங்களைப்பூண்டு பாவை நோன்பு நோற் பார்கள். அவர்கள் பாவையை வழிபட்டு நல்ல நாயகனை அடையவேண்டும் என்றும், இன்பமாக வாழவேண்டுமென்றும் தன் இன்ப வாழ்விற்கு நிறைய செல்வங்களைப் பெறவேண்டு மென்றும், நாட்டில் வறுமை நீங்கி செல்வம் செழித்தோங்க நல்ல மழை பொழிய வேண்டும் என்றும் வேண்டினர். திருப் பாவை, திருவெம்பாவையும் இக்கருத்துக்களை வலியுறுத்து கின்றன. இந்த நோன்பானது மார்கழித் துவக்கத்திலிருந்து தொடங்கி திருவாதிரை வரை நடைபெறும். ஐந்தாம் நாளா கிய பஞ்சமியிலிருந்து தொடங்கி பௌர்ணமி வரையில் நடை பெறுவதும் உண்டு.

"ஐந்தின் முதலா ஒன்பதின் சாறும்
ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நாற்றலும்
பனிநீர் தோய்தலும் பாவையாடலும்"

என்று பிங்கலத்தை நூலும் கூறுகின்றன.

பகவானுடைய வரலாற்றையும் அவதாரச் சிறப்புக்களை யும் கூறும் பாகவத நூலில் கண்ணை பெருமான், கோபியர்

துகில் கவர்ந்த கதையைக் கூறுமிடத்து மார்கழி நோன்பு பற்றிய செய்தி கூறப்படுகின்றது. கோகுலத்துள்ள பெண்கள் மார்கழியில் வைகறையாகிய விடியற்காலையில் துயில் நீங்கி எழுந்து யமுனை நதிக்குச் சென்று நீராடிய பின்னர் ஈரமணலால் படிமம் அமைத்து அதில் காத்யாயனி தேவியைக் கருதி வழிபட்டனர். அப்போது அவர்கள் "காத்யாயனி! ஏ மகாமாயே! மகாயோகின் யதீசுவரி; உன்னை வணங்குகிறோம்; எங்களுக்கு நத்தகோபர் மைந்தராகிய கண்ணனை நாயகனாக அருள் வீராக" என்று கூறி வேண்டிக் கொண்டனர்.

"காத்யாயனி! மகாமாயே! மாகாயோகின் யதீசுவரி! நந்தகோப சுதம் தேவி பதிம்மே குருதே நம:" என்ற பாடலைக் கூறினர். இவ்வாறாகப் பாரத நாட்டுக் கன்னிப் பெண்கள் பாவை நோன்பு மார்கழியில் நோற்றனர் என அறிகிறோம்.

திருவாதிரைத் திருநாள்: மார்கழித் திங்களில் இவ்வாறு கன்னிப் பெண்களேயன்றித் தேவர்களும், முனிவர்களும், ஆடவரும், மகளிரும் வைகறையில் துயில் நீங்கி எழுந்து குளிர்ந்த நீராடி ஆண்டவனைத் தொழுது வணங்கி வைகுண்ட ஏகாதேசியில் திருமாலைத் தியானித்துத் திருவாதிரையில் திருநடனங் கண்டு நடராசப் பெருமானைப் பரவும் நன்னாளே திருவாதிரைத் திருநாளாம்.

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–19 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 2–25 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	7½ ஷிலிங் அல்லது ரூ. 4–88 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

திருக்களிற்றுப்படியார்

தேவாரஇசைமணி,
திரு. எஸ். சங்கரநாராயணன் அவர்கள்.

தமிழ்நாட்டிற்குத் தனிப்பெருஞ் சிறப்பை விளைவிக்கும் மேன்மையுடையதாகத் திகழ்வது, சைவசித்தாந்தம் என்னும் அரியபெரிய தத்துவக் கொள்கையாகும். "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என உமாபதி சிவாசாரியரும், "ஆரா இன்ப அருங்கனி பிழிந்ததன் சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேன் அமுது" எனக் குமரகுருபரரும் பிறரும், சைவ சித்தாந்தத்தின் சிறப்பினை வியந்து பாராட்டியுள்ளனர். "சைவ சித்தாந்தம்" என்னும் தலைசிறந்த தத்துவக் கொள்கையினைத் தகவுற எடுத்து விளக்கும் முதன்மைசான்ற தமிழ் நூல்கள் பதினான்கு ஆகும். அவைகள் முறையே திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்பன. இவற்றைச் 'சைவ சித்தாந்த சாத்திரங்கள்' அல்லது 'மெய்கண்ட நூல்கள்' என அறிஞர்கள் வழங்குவர்.

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் — வந்தஅருட்
பண்பு வினா போற்றி கொடிபாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று

எனவரும் பழைய செய்யுள் ஒன்று, இச்சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் பெயரையும் வரிசைப்படுத்தி வழங்கியிருத்தல் காணலாம்.

திருக்களிற்றுப்படியார், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள் இரண்டாவதாகத் திகழ்கின்றது. இதனை இயற்றியவர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனர் என்பதும், இந்நூற்கு உரை வரைந்தவர் திருவாடுதுறை ஆதீனத்துத் தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசத் தம்பிரான் என்பதும்,

சேடன்படி புரக்கும் தென்கடவூர் உய்யவந்தான்
பாடும் களிற்றுப்படி தனக்கு — நீடியசீர்
தேடுபுகழ்ச் செஞ்சொற் சிவப்பிரகாசந்திருந்த
நாடியுரை செய்தான் நயந்து

என்னும் உரைப் பாயிரச் செய்யுளால் உணரப்படுகின்றன. திருக்களிற்றுப்படியார் நூலிலுள்ள வெண்பாக்கள், திருவுந்தியார் நூலிலுள்ள செய்யுட்களைப் பின்பற்றி, அவற்றின் சொற்பொருள் நலங்களை முழுவதும் தழுவி, அவற்றிற்கு ஒரு விளக்கவுரை போல இயற்றப்பட்டுள்ளது. இவ்வமைப்பினுலும்,

"வையம் முழுதும் மலக்கயங் கண்டிடும்
உய்ய வந்தான் உரை உந்தீபற, உண்மை உணர்ந்தார் என்றும் உந்தீபற"

என்னும் செய்யுளாலும், திருவுந்தியார் நூலை இயற்றியவர் உய்ய வந்தார் என்பது புலனகின்றது. இவரே 'திருக்களிற்றுப் படியார்' இயற்றிய திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனரின் ஞானசிரியர் என்பர். திருவுந்தியார் ஆசிரியர் திருவிசலூரைச் சேர்ந்தவர் என்பதற்குரிய சான்றேதும் இல்லை. மேலும் இந்நூல் செய்த பின்னர் அவர் தல யாத்திரை புரிதலை மேற்கொண்டு விட்டார் என்றும் ஒரு செவி வழிச் செய்தியுண்டு.

என்னறிவு சென்றளவில் யான் நின்றிருந்தபடி
என்னறிவிலார் அறிக என்றெருவன் — சொன்னபடி
சொல்லக்கேள் என்றெருவன் சொன்னன் எனக்கு அதனைச்
சொல்லக்கேள் யான் உனக்கச் சொல்.

எனவரும் பாடலால், திருக்களிற்றுப் படியார் ஆசிரியர், திருவுந்தியார் இயற்றிய உய்ய வந்த தேவரின் நேர்முக மாணக்கர் அல்லர் என்றும், அவர் தம் மாணக்கரின் மாணக்கரே

யாவர் என்றும் தெரிகின்றது. இந்நூலாசிரியரின் ஞானசிரியர் திருவிசலூரில் வதிந்திருந்தவர் என்பதும், அவர் ஒரு பெரிய சிவயோகியார் என்பதும்,

திருவிசலூர் ஆளும் சிவயோகி இன்றென்
வருவிசையை மாற்றினன் வந்து

எனவரும் இந்நூலின் செய்யுள் (96) கொண்டு தெளியலாம். அதன் கண்,

ஆளுடையான்! எந்தரமும் ஆளுடையானே! அறியும்
தாளுடையான்! தொண்டர் தலைக்காவல்!

எனவரும் முற்பகுதியினால், இவர் தம் ஞானசிரியராகிய சிவயோகியாரின் பெயர் ஆளுடைய தேவநாயனார் என்பது புலனாகின்றது.

திருவுந்தியார் சுருங்கிய சூத்திரமும், திருக்களிற்றுப் படியார் விரிந்த பாஷியமும் போல, ஒன்றனை ஒன்று தழுவி அமைந்தனவாகும். திருவிசலூர் ஆளுடையதேவர் விரும்பியருளியபடி, திருக்கடவூர் உய்ய வந்த தேவர் இதனை இயற்றியருளினர். இயற்றிய தன் பின்னர், இந்நூலாசிரியர் தில்லையம்பல வாணரைத் தரிசிக்கச் சென்றார்.

வையகம் பொலிய மறைச் சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன்தேட ஐயர்தாம் வெளியே
ஆடுகின்றாரை அஞ்சலி மலர்த்தி முன் குவிந்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்த அன்புந்தச் செய்தவப் பெரியோன்
சென்று தாழ்ந் தெழுந்தான் திருக்களிற்றுப்படி மருங்கு.

என்றபடி, இவரும் அங்குத் திருக்களிற்றுப்படி மருங்கு சென்று அம்பலவாணரைக் கண்டு தொழுதார். திருக்களிற்றுப் படியின் கண் தாம் இயற்றிப் போந்த இந்நூலை வைத்துப் பணிந்து நின்றார். அனைவரும் இந்நூலின் அருமை பெருமைகளை அறிந்து கொள்ளும் வண்ணம், அத் திருக்களிற்றுக்கை நிமிர்ந்து இந்நூலை எடுத்து அம்பலவாணர் திருவடிகளில் வைத்தது. அதுகண்டு மகிழ்ந்த தில்லைவாழ் அந்தணர் மூவா

யிரவரும் பிறரும் அதிசயித்து, இந்நூற்குத் திருக்களிற்றுப் படியார் எனப் பெயர் வழங்கி மகிழ்ந்தனர் என்பது வரலாறு.

திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படியாரும், ஏனைய சித்தாந்த சாத்திரங்கள் பன்னிரண்டற்கும் முற்பட்டு, சிவஞான போதத்திற்கும் கூட முந்தித் தோன்றியவை. இவைகள் சிவஞான போதத்திற்கு பிற்பட்டனவாக இருந்திருப்பின், சிவஞான சித்தியார், உண்மை விளக்கம், சிவப்பிரகாசம் முதலிய நூல் களில் ஆசிரியர் மெய்கண்டார்க்கு வணக்கப் பாடல்கள் அமைந்திருப்பது போல, இந்நூல்களிலும் அத்தகைய குறிப்புக்கள் அமைந்திருக்கும். அங்ஙனம் காணப் படாமை யொன்றே உந்தியும், களிறும் ஏனைய மெய்கண்ட நூல்களுக்கு முற்பட்டுத் தோன்றியவை என்பதற்குப் போதிய சான்று ஆகும். மேலும் ஏனைய மெய்கண்ட நூல்கள் போலத் தடை விடை முறைகளிலோ, பரபக்கம், சுபக்கம் என்னும் நெறி களிலோ, பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் முதலிய வகைகளிலோ, அதிகரணம் முதலிய நூற் பிரிவுகளிலோ அமைந்திருக்கக் காணுமையும், இவ்விருநூல்களும் மற்றைய மெய்கண்ட நூல்களுக்கு முற்பட்டுத் தோன்றியவை என்பதனை வலியுறுத்தும். இவ்விரு நூல்களும் சிவானுபூதி பற்றிய செய்தி களை மாத்திரம் தமக்குரிய பொருளாக மேற்கொண்டு, இனிய எளிய பாடல்களால் இயற்றப் பெற்றுள்ளன.

திருக்களிற்றுப்படியார் ஆசிரியர், மெய்கண்டார்க்கு முற் பட்டவர் எனினும், சேக்கிழார் சுவாமிகளுக்குச் சற்று பிற் காலத்தவர் என்றும், பெரிய புராணத்தில் மிகவும் ஈடுபாடும் பயிற்சியும் பெற்று விளங்கியவர் என்றும் தெரிகின்றது. பெரிய புராணத்தில், அரிவாட்டாயநாயனுர் வரலாற்றில் வரும் "ஊட் டியும் அரியா நின்ருர் உறுபிறப்பு அரிவார் ஒத்தார்" என்னும் வரியினை நினைவு கூர்ந்து, அதனைத் தழுவிய நிலையிலேயே,

"ஊட்டியறுத்தவர்க்கே ஊட்டியறுத்தவரை
நாட்டி உரை செய்வதென்னே? நாம்"

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுட் பகுதி அமைந்திருத் தல், இங்கு எண்ணியுணரத்தக்கது. பெரிய புராணத்தில் வரும்

அடியார்களின் செயல்களை மெல்வினை, வல்வினை என இரு வகைப் படுத்தி, எல்லாராலும் எளிதாகச் செய்யத்தக்க வழி பாட்டுச் செயல்கள் மெல்வினை (17) என்றும், சிறுத்தொண்டர் (18) என்றும், சண்டேசுரர் (19) அரிவாட்டாயர் (20) முதலிய நாயன்மார்களின் செயல்களைப்போல எல்லாராலும் எளிதாகச் செய்தற்கியலாதன வல்வினை என்றும், 'இவ்விரண்டனுள் எதன் கண் நின் உள்ளம் இயல்பாகச் செல்லுகின்றதோ அதனையே கடைப் பிடித்து இறைவனை வழிபட்டு உய்க' என்றும், திருக் களிற்றுப்படியார் செய்திருக்கும் விளக்கம் பெரிதும் போற்ற தற்குரியது. திருவுந்தியாரின் சொல்லையும் பொருளையும் முழு வதும் தழுவியேத் திருக்களிற்றுப்படியார் இயன்றுள்ளது என் பது யாவரும் அறிந்ததே. அதற்கு ஒரு சான்று மட்டு மாதல் தாலிபுலாக நியாயம் பற்றி ஈண்டுக் காண்டல் இன்றியமை யாதது.

அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற

என்னும் திருவுந்தியார் செய்யுள் இறைவனே ஆசிரியனாக வந்து உயிர்களுக்குத் தானாகும் தன்மை அருளுதலை யுணர்த்து கின்றது.

"அகளமயமாய் நின்ற அம்பலத்தெம் கூத்தன்
சகளமயம் போல் உலகில் தங்கி — நிகளமாம்
ஆணவ மூலமலம் அகல ஆண்டனன்காண்
மாணவக என்னுடனாய் வந்து"

திருக்களிற்றுப்படியார்செய்யுள்,மேலைத்திருவுந்தியார்செய்யுளை முழுவதும் தழுவி அமைந்திருத்தல் காணலாம். திருவுந்தியார் அகளம் என்றதை 'அகளமயமாய் நின்ற அம்பலம்' எனவும், சகளம் என்றதைக் 'கூத்தன்' எனவும், 'யாரும் அறிவரிது அப் பொருள்' என்றதைப் 'பாகத்து அருள் வடிவும் தானும் ஆகிய அந்தப் பெருவடிவை' எனவும், 'தானாக' என்றதைப் 'பேருலகில் தங்கி என்னுடனாய் வந்து' எனவும் 'தந்தது' என்றதை 'நிகள மாம் ஆணவ மூலமலம் அகல ஆண்டனன் காண்' எனவும்

திருக்களிற்றுப்படியார் விரித்துரைத்திருக்கும் பொருத்தமும் சிறப்பும், அறிந்து மகிழ்தற்குரியன.

திருக்களிற்றுப்படியார் ஆசிரியருக்குச் சிவபிரானின் திருவுருவங்களுள், அம்மையப்பர் (அர்த்தநாரீசுவரர்) திருவுருவத்தில் மிகுந்த ஈடுபாடும் பக்தியும் இருந்தன எனத் தெரிகின்றது. "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக" எனத் தம் நூலின் முதற் செய்யுளிலேயே, அவர் அம்மையப்பரை முதற்கண் குறிப்பிட்டுத் துதித்துத் தம் நூலைத் தொடங்குகின்றார். மேலும் "பாகத்து அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப் பெருவடிவை யார் அறிவார் பேசு" (5) எனவும், "ஆர்த்ததுயர் அகல அம்பிகையோடு எவ்விடத்தும் காத்தல் அவன் கடனே காண்" (42) "யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்மாதேயும் பாகன் இலச்சினையே" (82) எனவும், "எண்ணுறும் ஐம்பூதமுதல் எட்டுருவாய் நின்றானும் பெண்ணுற நின்றாடும் பிரான்" (83) எனவும், பல இடங்களில் இந்நூலாசிரியர் அம்மையப்பரின் திருவுருவினைச் சிறப்பித்தோதுகின்றார்.

மெல்வினையே என்னவியனுலகில் ஆற்றரிய
வல்வினையே என்னவரும் இரண்டும் — சொல்லில்
சிவதன்மம் ஆம், இவற்றிற் சென்றதிலே செல்வாய்
பவகன்மம் நீங்கும்படி

இங்ஙனமே இந்நூல் அகமார்க்கம் (அருள்வழி) சகமார்க்கம் (மருள்வழி) என இரு நெறிகளைக் குறிப்பிட்டு, திருக்குறிப்புத் தொண்டர், அரிவாட்டாயர், ஏயர் கோன் களக்காமர், மூர்த்தியார், மூர்க்கர், ஏனாதிநாதர் என்னும் நாயன்மார்கள், முறையே கருங்கற்பாறை, நிலவெடிப்பு, வாட்படை, சந்தனக் கல், சூதாடு கருவி, கேடயம் என்பனகொண்டு தத்தம் உலகியற் செயல்களைச் செய்து போந்தனரெனினும், அவற்றால் நேர்தற்குரிய வாதனைகளை அடைந்து வருந்தாமல் நீக்கிக் கொண்டமைக்குக் காரணம், அவர்கள் அனைவரும் அகமார்க்கம் (அருள்வழி) கடைப் பிடித்து ஒழுகியமையேயாகும் என்று விளக்கியருள்கின்றது.

(தொடரும்)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

குயிற்பத்து

குயிற் பத்தாவன: முற்பதிகப்பாவில் இவ்வகையாகப் பேசாமற் பேசின அநுபவத்தை இருவருமொருவர் என்றறிவித்தற்குத் தன்னுள்ளத்தைக் குயிலாகவும், கூவின கூவுதல் இன்பப் பரம் பொருளாகவும் வைத்துச் சொன்னபடியால், அவ்வார்த்தை ஓரின்பமென அருளிய அநுபூதிகம்.

திருப்பா ஆசிரிய விருத்தமாகத் திருத்தில்லையிலோதியது.

இனி, திருவடிப் பெருமையின் அருமை யின்பத்தைக் கூறும் (தி. - ன்.) :—

கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லா வந்த மிலான்வரக் கூவாய்.

(இ - ள்). சிவஞானம் பெறுவதான பரிபாக சைதனிய உள்ளமே கேள்! நீ இன்ப சொரூப சத்தமே பொருளான திருவருட் குயிலானதால் கேட்கவில்லையோ? நமது உயிரான சிவன் திருவடி இரண்டும் ஆராயுமிடத்து, உண்மை அநுபூதிகமாவன:— திருவடியாவது பரஅபர ஞானப்பொருள்; அவைக்கெட்டாத, ஆறத்துவ, புவன பாதலமுங் கடந்து அவை நின்றன; ஞானப் பிரகாச நவந்தர நவமணி திருமுடி வினவில், சொல்லுக்கெட்டாத வாச்சியப் பொருளானதால், அடியே முடி, முடியே அடி; அவயவமின்றி எங்கும் நிறைவானதால் உற்பத்தியும் அவைக்குக் காரணமான சார்புடைய குணமும், நாசமுமில்லாத நாதன், அடி! என் உள்ளத்திற் பிரியாதிருக்க வருவதான அருளைக் கூவாய்! ஞானக்குயிலே! என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- டி நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

விளம்பரம்

ஸ்ரீ பரார்த்த நித்திய பூஜா விதி

ஸ்ரீ அகோர சிவாசாரியர் அருளிச் செய்த வடமொழி நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு, இரண்டாம் பதிப்பு, விலை ரூ. 2-00. அஞ்சற்செலவு, பிரதி 1-க்கு ரூ. 1-50. மேற்கொண்டு ஒவ்வொரு பிரதிகளுக்கும் 0-50 வீதம் முன் பணம் அனுப்புக.

மற்றும் தமிழிலும், வடமொழியிலும் வெளியிடப் பெற்றுள்ள சிவாகமம்–சித்தாந்த நூல்களின் விலைப்பட்டியல் 0-10 பைசா. அஞ்சல் தலை அனுப்பிப் பெறுக.

காரியதரிசி

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம்

தேவக்கோட்டை.

இராகம்: கல்யாணி **தாளம்: ஆதி**

பல்லவி

நம்பினேன் அருள்புரி நாயகா
அம்பிகைபாலனே ஆனந்தரூபனே (நம்பி)

அனுபல்லவி

தும்புருநாரதர் தினம் துதிசெய்திடும்
தேவி தயாபரியாம் கௌரிசெல்வனே உனை (நம்பி)

சரணம்

உய்திடும் வகை ஒன்றறியேனே
தெய்வமே துணை அதைத் தெரிந்தேனே
பொய்சூது பொறுமை வஞ்சம் அதைத் தவிர்க்க
மெய்யான பொருளாம் நின்பாதம் சரணம் ஐயா (நம்பி)

வி. கே. முத்தையா பிள்ளை பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3,

Sri Manickavasagar Memorial Bhattar Padikkasu Nithi At Uttarakosamangai - Capital Rs. 11,000/-

"In Uttarakosamangai's Shrine
Biding showed He Wisdomform"

"In the most supreme of bliss
He would place true saints of His
Uttarakosamangai town
In His Home town of renown"

So did Manicka Vachakar celebrate Uttarakosa manga in Keerthi Tiruvagaval (the sacred song of Siva's renowned acts) the second chapter of Tiruvasagam.

Once the Lord disclosed the meaning (Uttaram) of the Vedas and Agamas (Kosam) to the Mother of the Universe (Mangai) and hence Uttarakosamangai got its name. It is also named (1) Biramapuram as it is the place where Brahma obtained grace, (2) Sathvikapuram as Brahma got the virtue of being absolutely good, (3) Vethirikaranyam as Saint Vyasa was bestowed with grace, (4) Vyagrapathapuram as Vyagarapatha performed Tapas there, (5) Athi Chidambaram as immaculate wisdom is bestowed to those who worship there and (6) Tenkasi as it bestows eternal bliss like Kasi in the North.

Once a thousand sages were performing Tapas and in the meanwhile the Lord wanted to go to Lanka and shower bliss to Mandothari (the queen of Ravana). While departing he told them that fire will be visible in the tank at the time of bestowing grace to Mandothari and that all might plunge into that fire and reach Him. Accordingly fire appeared in the tank

and all entered the fire except one who was having the Holy Book containing the Vedas and Agamas. Those who got into the fire were blessed to form themselves into one Siva Lingam and with the Lord joining the frame was formed the Sahasra Lingam at Uttarakosamangai.

The sage with the sacred books, who stayed away from entering the fire, was blessed by the Lord that he would be born in the Pandya country after a thousand celestial years and that he would sing sweet emarald-like songs in His praise and be known as Manickavasagar. Everything had happened as ordained and Manickavasagar, while he visited Uttarakosamangai, extemporised a Hymn of fifty quatrains called Neeththal Vinnappam (Forsake-me-not).

To commemorate the act of the sage with the sacred book, a temple with the idol of Manickavasagar is still in existence on the bank of the Agni Theertham in Uttarakosamangai.

In such a sacred place of Uttarakosamangai this endowment to award monetary help to the Bhattars (Sivacharyas) who perform pooja to Mangaleswarar and Mangalanayagi, the presiding Lord and Goddess of the Shrine, has been created by His Holiness Sila sri Kasivasi Arulnandi Tambiran Swamigal avergal, Head of Sri Kasimutt, Tirupanandal (Thanjavur Dt.) This endowment shall be called "Sri Manickavasagar Memorial Bhattar Padikkasu Nidthi at Uttarakosamangai".

2. This endowment consists of Government Securities to the value of Rs. 11,000/- invested as follows:

1. Madras State Loan 1967 - 5¾% - MS. 557 Rs 3000/-
2. Madras State Electricity Board Bond 1978 5¾% No. F. 6/1669/71 Rs 3000/-
3. Madras state Loan 1978 5¾% - acknowledged by the Agent, State Bank of India, Kumbakonam in his No. 57 dated 12—9—66 Rs 5000/-

Total Rs 11000

The administration of the fund shall vest in us and our successors in interest.

3. (a) The interest derived from the capital annually shall be setapart to award subsistence allowance ( ) of Rs. one per day to the Bhattar who performs pooja to the Siva Lingam called Mangaleswarar, the presiding God of the temple and a half of a rupee per day to the Bhattar who does pooja te Mangalanayagi, the Goddess of the temple at Uttarakosamangai if separate persons should perform the pooja, and if one and the same individual should perform the pooja, to both the deities a sum of Rs 1-50 per day may be paid to one and the same person.

(b) The balance, after awarding the subsistence allowance and after meeting the incidental expenses pertaining to the working of the endowment, shall be utilised for the annual anointment of Sri Nataraja with Sandal paste (சந்தனமெய்ப் பூச்சு) on the Margali Tiruvathirai day in the temple of Uttarakosamangai.

(c) The financial help or the subsistence allowance per day and the amount for Sandal paste (சந்தன மெய்ப்பூச்சு) may vary according to the amount of interest derived from the endowed capital.

(d) The subsistence allowance (படிக்காசு) at the rate of Re. 1/- per day and Rs. 0-50 per day as stated above should be claimed every month separately by the individual Bhattars concerned with the certificate of the Trustee or Executive Officer of the temple. On receipt of the certificate in the prescribed form, the subsistence allowance (படிக்காசு) will be sent by Money order to the Bhattar direct for the actual number of days he performed the Pooja to the respective deity.

4. The income from endowment shall not be diverted to any other purpose than those stipulated in this deed.

5. The endowed capital shall always be in our name and our successors in interest. The endowed capital shall be invested in highest interest yielding Government Securities or invested in long term deposits as and when necessary.

Note: This endowment has been approved by the Commissioner, H. R. &. C. E (Admn.) Department, Madras in D. Dis. 46149/66 dated 26—11—1966.

Tirupanandal
Dated 2-12-1966 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 2-12-66 as No. 61 of 1966 of Book 4 volume 53 pages 225 to 227.

உ

திருப்பனந்தாள் – ஸ்ரீ காசி மடம்

‘ திருமுறை வெளியீடுகள் ’

			ரூ.	பை
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...		
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்	...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் மூலம்) மட்டும் புதிய பதிப்பு)	...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2	00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1	30
7*	திருவாசகம் (அச்சில்)	...		
8*	திருக்கோவையார்–பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2	90
9*	ஒன்பதாம் திருமுறை–திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1	50
10	,, ,, மூலம் மட்டும்	...	0	56
11*	திருமந்திரம் (புதிய பதிப்பு) ,,	...	2	25
12*	பதினோராந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1	50
13*	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3	00
14	பெரியபுராணம் உரை நடை	...	2	00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0	40
16*	அகத்தியர் தேவாரத் திரட்டு	...	0	35
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3	00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2	25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1	75
20	கந்த புராணம் – முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2	75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2	00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1	50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3	00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1	50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2	50
26	திருக்குறள் – காமத்துப்பால் ,,			
	ஷை 24, 25, 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4	00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் (அச்சில்)			
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரையுடன்	...	1	25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0	25
30	திருக்கைலாய ஞானவுலா– உரையுடன்	...	0	50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0	25
32	கந்தரனுபூதி மூலம் (அச்சில்)			
33	கந்தரனுபூதி தெளிவுரை	...	0	35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன் (அச்சில்)			
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0	10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும் (அச்சில்)			
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0	50
38	சகலகலாவல்லிமாலை ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது (அச்சில்)			

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.

Regd. No. M. 5574 குமரகுருபரன்

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்) (அச்சில்)		
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்		1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட் கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை	...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும் (அச்சில்)		
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 15
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	௸ ௸ பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
54	௸ ௸ காமத்துப்பால் ௸		(அச்சில்)
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன் (அச்சில்)		
56	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்)		(அச்சில்)
57	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
59	பழமொழித்திருமுறை	...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50
61	Hymns and Proverbs	...	0 30
62	அப்பர்விழா வெளியீடு	...	0 25
63	நவக்கிரகமாண்பு	...	0 25
64	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும்	...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்-66.